பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 13

திங்கட்கிழமை
09 டிசெம்பர் 2024

கார்த்திகை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## யாழ்ப்பாண இளைஞன் பிரான்ஸில் கொலை!

பாரிஸ், டிசெ. 9
பிரான்ஸில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இனந் தெரியாத

11

## கடந்தகால செயற்பாடுகளால் 2025இல் மருந்துத் தட்டுப்பாடு

### மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர் சங்க கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.9
கடந்த அரசாங்கத்தின் பலவீனம் மற்றும் கடந்தகால சுகாதாரத்துறையின் செயற்பாடுகள் காரணமாக அடுத்தாண்டு அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கத்தின் கூட்டமைப்பு

11

## உயிரைப் பறிக்கும் திடீர்க் காய்ச்சல்!

### இருநாள்களில் மூவர் உயிரிழப்பு
### விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெம்பர் 9

திடீர்க் காய்ச்சல் காரணமாக கடந்த இருநாள்களில் இளவயதினர் மூவர் உயிரிழந்துள்ள நிலையில், பொதுமக்கள் இது தொடர்பில் விழிப்புடன் செயற்படவேண்டும் என்று சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர். காய்ச்சல், இருமல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடவேண்டும் எனவும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

11

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9
விபத்தில் சிக்கி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த

11

## பிரான்ஸ் கொலைச்சந்தேகநபர் கனடாப் பொலிஸாரால் கைது!

### யாழில் வன்முறைக்கும்பலை இயக்கியவர்

றொறன்ரோ, டிசெ.9
2022ஆம்ஆண்டுபிரான்ஸில் நடந்த கொலைச் சம்பவம் தொடர்பில் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் கனடாவில் கைது செய்யப்பட்டு பிரான்ஸுக்கு நாடுகடத்தப்படவுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
கைது செய்யப்பட்டவர் இலங்கையின் வடக்கில் இயங்கிய ஆவா எனப்படும் வன்முறைக்

11



## புதிய அரசாங்கத்தின் கொள்கை என்ன? இந்தியப் பயணத்தில் விளக்குவார் அநுர

கொழும்பு, டிசெ.9
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 16 ஆம் திகதி டில்லி செல்லவுள்ள நிலையில், இந்தியப் பிரதமருடனான இரு தரப்பு சந்திப்பின்போது புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றி தெளிவுபடுத்தவுள்ளார் எனத் தெரியவருகின்றது.
இந்தியப் பயணத்தின் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாத முற்பகுதியில் சீனாவுக்கும் பயணம் மேற்கொள்ள ஜனாதிபதி அநுர திட்டமிட்டுள்ளார்.
முதலீடுகளை ஈர்ப்பது, இடைநிறுத்தப்பட்டுள்ள

11

## தமிழக மீனவர்கள் 8 பேருக்கு 20 ஆம் திகதிவரையும் மறியல்

யாழ்ப்பாணம், டிசெ.9
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 8 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.
நேற்றுமுன்தினம் இரவு நெடுந்தீவுக் கடற்பரப்பில் சுற்றுக்காவலில்

11

## புலிகள் மீதான தடையை உறுதிசெய்தது இந்தியா!

புதுடில்லி, டிசெம்பர் 9

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய மத்திய அரசாங்கத்தின் தீர்ப்பாயம் உறுதி செய்துள்ளது.

11

## போராளிகளிடம் வீழ்ந்தது சிரியா!

### தப்பியோடினார் அதிபர் அசாத்

டமஸ்கஸ், டிசெ. 9
சிரியாவில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதாகவும், சிரிய அதிபர் அல் அசாத் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்றும் போராளிகள் அறிவித்துள்ளனர்.
கடந்த இரண்டு வாரங்களாக சிரியாவின் அலெப்போ, ஹோம்ஸ், ஹமா, தாரா ஆகிய முக்கியமான நகரங்களைக் கைப்பற்றியிருந்த போராளிகள், நேற்றுமுன்தினம் நள்ளிரவு மேற்கொண்ட தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடர்ந்து சிரியத் தலைநகர்

11



முச்சந்தி முரளி

'மருந்துக்கும் தட்டுப்பாட்டோடதான் புதுவருசம் பிறக்கப்போகுது கண்டியளோ'

## கிணற்றுக்குள் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.9
பருத்தித்துறை, கற்கோவளத்தில் கம்பி வலையால் மூடப்பட்ட பொதுக் கிணறு ஒன்றுக்குள் இருந்து பெண் ஒருவரின்

11

## அல் அசாத் பயணித்த விமானம் மாயமானது!

### சுட்டு வீழ்த்தப்பட்டதா என உலக நாடுகள் சந்தேகம்

» 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நினைவுகூரலில் நாடகமாடும் அரசாங்கம்

### சட்டத்தரணி மணிவண்ணன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.9
இறந்தவர்களை நினைவுகூரும் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டு நாடகம் செய்கின்றது. நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு பயங்கரவாதத் தடை சட்டத்தில் எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.
- இவ்வாறு சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்குத் தடை இல்லை என இந்த அரசாங்கம் வெளிப்படுத்தியது. எனினும் கொக்குவில் சந்திப்பகுதியில் மாவீரர் தின நினைவேந்தலை மேற்கொண்டவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. சுதந்திரமான நினைவேந்தல் உரிமை வழங்கப்படவேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடாக உள்ளது.
நினைவேந்தல் என்பது எங்களுடைய உரிமை. பயங்கரவாதத் தடை சட்டத்தில் கூட இறந்தவர்களை நினைவு கூருவதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நினைவு கூருவதும் தடையாகக் குறிப்பிடப்படவில்லை.
ஆகவே நினைவேந்தல் என்பது பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குரிய செயற்பாடல்ல. பயங் கர வாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் கூட்டு நினைவேந்தலை மேற்கொள்வதற்கு எந்த விதத் தடையும் கிடையாது - என்றார். (ச-125)

# எலிக்காய்ச்சல் அபாயம் தடுப்புமுறையை பின்பற்றுக

### மருத்துவர் கேதீஸ்வரன் அறிவுறுத்து



**யாழ்ப்பாணம், டிசெ.9**
**இலங்கையில் தற்சமயம் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் யாழ்ப்பாண மக்கள் இது குறித்துப் போதிய சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி விழிப்புடன் செயற்படவேண்டும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

எலிக்காய்ச்சல் நோய் நிலைமை தொடர்பாக தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வயல் மற்றும் தோட்ட சேற்று நிலப் பகுதிகளில் எலியின் சிறுநீர் கலக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இதன்போது விவசாயிகள் எலிக்காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகின்றனர்.
விவசாயிகள் முறையான பாதணிகள் இன்றி குறித்த நிலங்களில் கால் வைக்கின்றபோது அவர்களது காலில் காணப்படுகின்ற காயங்கள் ஊடாகக் குறித்த தொற்று ஏற்படக்கூடும்.
ஆகவே விவசாயிகள் தமது விளை நிலங்களுக்கு ஏற்ற பொருத்தமான பாதணிகளை அணிவதன் மூலம் இதனைத் தடுத்துக் கொள்ளலாம்.
பொதுமக்கள் வேலைகளை முடித்து விட்டுச் செல்லுகின்ற பொழுது சுடுநீரால் காலைக் கழுவுவதன் மூலம் இந்தத் தொற்றைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.
அத்துடன் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் மருத்துவ ஆலோசனைகளுடன் 'டொக்சிசைகளின்' எனும் தடுப்பு மருந்தைப் பெற்று உட்கொள்வதன் மூலம் இந்தத் தொற்று நீங்கும்.
எலிக்காய்ச்சல் நோயின் அறிகுறிகளாகக் காய்ச்சல், கண் மஞ்சள் நிறமாதல், சிறுநீர் மஞ்சள் நிறத்துடன் வெளியேறல் என்பன காணப்படுகின்றன. இந்த அறிகுறிகள் தொடரும் பட்சத்தில் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையை நாடவேண்டும்.
தவறும் சந்தர்ப்பத்தில் கிருமித் தொற்று அதிகமாகி ஈரல், சிறுநீரகம், மற்றும் நுரையீரல் என்பன பாதிப்படைந்து உயிராபத்தும் ஏற்பட நேரிடும் - என்றார். (ச-125)

# சுதந்திரக் கட்சி கதிரையில் போட்டி


கொழும்பு,டிசெ. 9
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கதிரைச் சின்னத்தில் களமிறங்கவுள்ளது என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் 341 சபைகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி கதிரைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. இதற்காகத் தேர்தல் வழிநடத்தல் குழுவொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன. அடுத்துவரும் நாள்களிலும் பேச்சுகள் தொடரவுள்ளன. தேர்தல் சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்வோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# இறக்குமதி அரிசி அடுத்தவாரம் வரும்

கொழும்பு, டிசெ.9
இறக்குமதி செய்யப்பட்ட அரிசி அடுத்த வாரம் நாட்டுக்கு வரும் என அத்தியாவசிய உணவுப் பொருள்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து குறித்த அரிசித் தொகை முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. டிசெம்பர் 4 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அரிசி இறக்குமதி செய்வதற்காக அனுமதியளிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# 1 கோடி ரூபா ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு,டிசெ. 9
ஜாஎல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் 500 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஜாஎல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்தப் பெறுமதி ஒரு கோடி ரூபா எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# இனி ஒரு லீற்றர் மதுப்போத்தல்!

கொழும்பு, டிசெ.9
மதுவரி வருவாயை அதிகரிப்பது உட்பட பல காரணிகளின் அடிப்படையில் இலங்கையில் மது உற்பத்தியாளர்களுக்காக ஒரு லீற்றர் மதுபானப் போத்தல்களை உற்பத்தி செய்வதற்கு மதுவரித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.
முன்னதாக இந்த நாட்டு மதுபான உற்பத்தியாளர்களுக்கு 180 மி.லீ. 375 மி.லீ., 750 மி.லீ. போன்றவற்றில் மதுபானம் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில், புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் உற்பத்தியாளர்கள் 1000 மில்லிலீற்றர் கண்ணாடிப் போத்தல்களில் மதுபானங்களை அடைக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பண்டிகையை முன்னிட்டு விசேட சோதனை

கொழும்பு, டிசெ.9
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொதுமக்கள் அதிகம் கூடும் நகரங்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களை ஆய்வு செய்வதற்காக சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. டிசெம்பர் 1 முதல் நேற்று வரை நாடு முழுவதும் 150க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக உபுல் ரோஹண தெரிவித்தார். (ச-இ)

# ஜப்பான் அரசால் இடர் நிவாரணம்

கொழும்பு, டிசெ.9
சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜப்பான் அரசாங்கம் சுமார் 300 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிப்பொருள்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.
இந்த உதவிப் பொருள்களை ஏற்றிவந்த விசேட சரக்கு விமானம் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.
பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக அவை பகிரப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலர்களுக்கு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையில் தமிழின அழிப்பு; பிரான்ஸில் நினைவுக்கல் திறப்பு

பிரான்ஸ்,டிசெ.9

**பிரான்ஸில் தமிழர்கள் அதிகம் வாழும் பொபினி நகரில் தமிழின அழிப்பின் நினைவாக நினைவுக்கல் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.**

குறித்த நினைவுக்கல்லினை பொபினி நகரபிதாவும் மாவட்ட சபை உறுப்பினருமான அப்டெல் சாடி திறந்துவைத்தார். நினைவுக்கல்லில் 'சிறீலங்கா அரசினால் 1948 முதல் 2009 மே மாதம் வரை இனவழிப்பு செய்யப்பட்ட தமிழீழ மக்களின் நினைவாக' என்ற வாசகங்கள் பிரெஞ்சு மொழியிலும் தமிழ் மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன. (ச-33)




சத்தம் சந்தடியில்லாம அம்பது அறுபது வீடுகளுக்குள்ள புகுந்து 300 பவுணுக்கும் கூட நகைகளை ஆட்டையைப் போட்ட கள்ளனை ஒருமாதிரிப் பொலிஸ்காரர் கொழும்பில பொறிவைச்சுப் பிடிச்சுப்போட்டினம் அப்பிடிப் பிடிக்கேக்க, ஒரு பொலிஸ்காரருக்கு இந்தக் கள்ளன் வாயால கடிச்சு அவருக்கு பெரியகாயமாம்.

அந்தக் கள்ளன் களவெடுக்கிற கதையை ஏழெட்டுப் புத்தகமா எழுதலாம் போல கிடக்கு. அந்தளவுக்கு ஒரு விநோதமான கள்ளன். பொலிஸ்காரரிட்ட அந்தக் கள்ளன் என்ன வாக்குமூலம் குடுத்திருக்கிறான் எண்டதை ஒருக்காப் பாருங்கோ.

"நான் சொந்த இடம் புங்குடுதீவு. முதல் நான் புங்குடுதீவில இருந்து ஆடு களவெடுத்தந்து யாழ்ப்பாணத்தில விக்கிறனான். அப்பிடிக் களவெடுத்த ஆட்டை கொண்டரேக்க பொலிஸ்காரர் பிடிக்கக்கூடாது எண்டதுக்காக சின்னப்பிள்ளை மாதிரி ஒரு பெட்சீட்டால போர்த்தி, ஆட்டின்ர தலைக்கு ஹெல்மெட் போட்டு மனுசி பின்னால வைச்சிருக்க நான் பைக்கில வருவன். குழந்தையைக் கொண்டுபோறமாக்கும் எண்டு பொலிஸும் மறிக்காம விட்டிடும். ஆனால் ஒருநாள் மாட்டுப்பட்டுப்போனன்.

பிறகு அதை விட்டிட்டு நானும் மச்சானும் ஆக்கள் இல்லாத இடங்களில நிண்டு போறவாறவையிட்ட நகை, காசு எண்டு வெருட்டிப் பறிச்சம். அதிலையும் பிடிபட்டதால, இந்தத் தொழிலே வேண்டாம் எண்டிட்டு நான் மலேசியாவுக்குப் போனன். ஆனால் அங்கை நான் நினைச்சமாதிரி உழைக்க முடியேலை. அதுக்குப் பிறகுதான் இப்பிடி இரவில வீடுகளுக்க புகுந்து களவெடுக்கிற ஐடியா வந்தது. நானும் மனுசியும் காரிலதான் கொழும்பில இருந்து வருவம். பிறகு இஞ்ச எங்கையாவது ஒரு சைக்கிளை களவெடுப்பன். காரில போனால் சி.சி.ரி.வி .கமெராவில மாட்டுப்பட்டிடுவம் எண்டதால் இப்பிடி களவெடுத்த சைக்கிளில பகல் முழுக்க சுத்தித் திரிவன். அப்பிடித் திரியேக்க வீடுகள நோட்டம் விடுவன். கூடுதலா ஆம்பிளையள் இல்லாத வசதியான வீடுகளைப் பார்த்துவைச்சுப்போட்டு, விடியப்பிறம் ஒருமணி போல அந்த வீடுகளுக்கு சைக்கிளில போவன்.

அந்த நேரத்தில எல்லாரும் அடிச்சாலும் எழும்பாயினம். அந்தளவு நித்திரையா இருப்பினம். வீடுகளுக்குள்ள பூர முதல் பைபிள் வாசிப்பன். அப்பிடி பைபிள் வாசிச்சால் பிடிபடமாட்டன் எண்டது என்ர 'சென்ரிமென்ற்'. பிறகு முன்கதவை ஒருமாதிரித் திறந்து உள்ளுக்க போகவே, எங்க காசு இருக்கு, எங்க நகை இருக்கெண்டு மணந்தே பிடிச்சிடுவன். நெடுக காசு, நகை எண்டு தேடித்தேடி இப்பிடி அதுகளின்ர மணம் எனக்குப் பழக்கப்பட்டுப் போட்டுது. செத்தவீடு நடந்த இடங்களில கைவைக்கமாட்டன். அவைக்கு ஏன் இன்னும் துன்பத்தை நான் குடுப்பான்? காசு, நகையை மட்டும் தான் எடுப்பன். போன், ரீவி எண்டு வேற ஒண்டையும் தொடமாட்டன். அதுகளை எடுத்தால் பிடிபட்டுப் போடுவன். களவெடுத்த பிறகு சைக்கிளில போய் எங்கையாவது தூரமா அதை விட்டிட்டு, மனுசிக்கு கோல் அடிச்சு வரப்பண்ணி காரில அப்பிடியே கொழும்புக்குப் போடுவம்.

இப்ப கொழும்பில வீடுவளவு எல்லாம் வாங்கினாலும்,பிடிபட்டுப் போடுவனோ எண்டு பயம் இருந்தது. அதால குடும்பத்தோட பிரான்ஸுக்கு போக காசெல்லாம் கட்டிட்டன். வாறகிழமை அங்க போயிருப்பன். அதுக்குள்ள பொலிஸ் பிடிச்சுப் போட்டுது"

– எண்டு அவன் சொல்லச் சொல்ல பொலிஸ்காரருக்கு மயக்கம் வராத குறையாம். உங்களுக்கு என்ன செய்யுது?

padsi@uthayan.com – பட்சி

# தமிழக மீனவர்கள் கைதுக்கு இராமேஸ்வரத்தில் போராட்டம்

கொழும்பு,டிசெ. 9

தமிழக கடற்றொழிலாளர்கள் 14 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் நேற்றுமுன்தினம் நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்கள் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அண்மையில், தமிழக கடற்றொழிலாளர்கள் 14 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தநிலையில், இலங்கைக் கடற்படையினரின் அநீதியான நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்த இராமேஸ்வரம் கடற்றொழில் சங்கங்கள், கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-இ)

# உப்பு உற்பத்தி 40 வீதம் வீழ்ச்சி

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த வருடமும் இந்த வருடமும் நாட்டில் உப்பு உற்பத்தி 40 வீதத்தால் குறைந்துள்ளதாக வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து உடனடியாக ஆய்வு செய்து தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் உள்ள உப்பு இருப்பு மற்றும் நுகர்வுக்குத் தேவையான அளவு ஆகியவற்றை ஆய்வு செய்த பின், இறக்குமதி குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## இலங்கை வங்கியின் முகவர் சேவை வடக்கில் ஆரம்பம்!

இலங்கை வங்கியின் முகவர் சேவை வடக்கு மாகாணத்தில் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய முதலாவது கிளை கடந்த வியாழக்கிழமை தொண்டைமானாறு உப தபாலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் தங்களுடைய வங்கித்தேவைகளை குறித்த முகவர் நிலையத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-45-100)

# கடமைக்கு இடையூறு ஐந்து பெண்கள் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.9

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் இளவாலைப் பொலிஸாரால் 5 பெண்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையத்துக்கு இவர்கள் விசாரணைக்கு வந்திருந்தநிலையில், அங்கு இரு தரப்பினருக்கு இடையே தர்க்கம் ஏற்பட்டு முரண்பட்டுள்ளனர். அப்போது அவர்கள் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட 5 பெண்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களைப் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (எ-125)

# மீனவருக்கு எச்சரிக்கை

கொழும்பு,டிசெ. 9

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பிராந்தியத்தில் குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால், மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்கள் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. கடற்பரப்புகளில் மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற்றர் வரையிலான பலத்த காற்று வீசுவதுடன், பலத்த மழை பெய்யக்கூடும். இந்தக் குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணித்தியாலத்தில் மேற்கு மற்றும் வடமேற்குத் திசை நோக்கி நகர்ந்து மேலும் வலுப்பெறும். இந்த நிலைமை காரணமாக எதிர்வரும் 10ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலாலி வீதியிலுள்ள

# ஆபத்தான கிளைகளால் அச்சத்தில் பயணிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் திருநெல்வேலிக்கு அருகாக அம்மாச்சிக்கு முன்பாக ஓங்கி வளர்ந்துள்ள மரத்தின் கிளைகள் முறிந்து விழும் அபாயத்தில் காணப்படுகின்றன. அவற்றை வெட்டி அகற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த மரம் ஓங்கி வளர்ந்து வீதிக்கு மேலாக கிளைகள் பரப்பி காணப்படுகிறது. இதனால் அச்சத்துடனே பயணிக்கவேண்டியுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக காற்று வீசும் போது குறித்த கிளைகள் முறிந்து விழும் அபாயநிலை காணப்படுகிறது.

எனவே உயிர்ப் பாதிப்பைத் தவிர்த்துக்கொள்ள முன்கூட்டிய பாதுகாப்பு ஏற்பாடாக குறித்த மரத்தின் கிளைகளை வெட்டி அகற்றுவதற்கு அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-10)



# இந்தியத் தூதரகத்தால் உதவிப் பொருள்கள்

மன்னார், டிசெ.9

இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களின் உதவித் திட்டத்தினூடாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மன்னார், துணுக்காய் மக்களுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உதவிப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கு அமைவாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மன்னார் துள்ளுக் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவிலுள்ள 8 கிராமங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 461 குடும்பங்களுக்கு குறித்த உதவிப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதர் ஸ்ரீ சாய் முரளி,யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரி, நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், அப்பகுதி கிராம அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டு உதவிப் பொருள்களை வழங்கி வைத்தனர். (ச-45-56-125)

நெடுந்தீவில்

# பனை உற்பத்தி பயிற்சித்திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

பனை அபிவிருத்திச்சபை பனைசார் உற்பத்திக்கான முழுமையான பயிற்சித் திட்டம், நெடுந்தீவு 'ஊரும் உறவும்'அமைப்பின் ஏற்பாட்டில் நெடுந்தீவில் இடம்பெறவுள்ளது.

பனைசார் அபிவிருத்தியில் ஆர்வமுள்ளோரும், குறிப்பாகப் பனைசார் உற்பத்தி தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

தங்கள் முழுப்பெயர் மற்றும் தொடர்பு விவரங்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக நெடுந்தீவில் அமைந்துள்ள 'ஊரும் உறவும்' அமைப்பின் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு நெடுந்தீவு 'ஊரும் உறவும்' அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. (ச-66)



# விழிப்புணர்வுப் பேரணி

கொடிகாமம், டிசெ. 9

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள்கள் செயற்பாட்டின் விழிப்புணர்வுப் பேரணி ஐசாக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். சமூகச் செயற்பாட்டமையம் இணைந்து யாழ். பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக ஆரம்பித்து யாழ். பொலிஸ் நிலையம் வரை விழிப்புணர்வுப் பேரணி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது. (ரி-45-159)

# 2 இலட்சம் தேங்காய்கள் சதொச ஊடாக விநியோகம்

கொழும்பு, டிசெ.9

சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை இன்று திங்கட்கிழமை முதல் இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்படும் என வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அரசாங்கத்துக்குச் சொந்தமான தென்னந்தோப்புக் காணிகளிலுள்ள தேங்காய்கள் சதொச ஊடாக விற்பனை செய்யப்படுவதாகவும், கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் சதொச நிறுவனத்திடமிருந்து தேங்காய்களை கொள்வனவு செய்ய முடியும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**இடபம்:** சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. உங்கள் தேவையை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவும், திடீர்ச் செலவுகளும் ஏற்படக் கூடும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சிலருக்குக் குடும்பம் தொடர்பான வேலையை முன்னிட்டு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்கு மேல் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மீனம்:** செலவுகளில் திட்டமிடல் அவசியம். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## அரசியல் புயலுக்குள் சிக்குமா அரசு?

எந்தவொரு நிகழ்வுமே எடுத்த எடுப்பில் நடப்பதில்லை. சின்னச் சின்ன விடயங்கள் ஒரு படிமுறை மாற்றம் பெற்று இறுதியில் ஒரு பெரும் சம்பவமாக பதிவாகின்றன. அது போன்றதே புயலும். கடற்பரப்பில் 26 செல்சியஸுக்கும் அதிகமான வெப்பநிலை தொடர்ந்து நீடிக்கும்போது காற்று வேகமாக வெப்பமடையும். வெப்பமடைந்த இந்தக்காற்றானது மேல் நோக்கிச் செல்லும். அப்போது அந்த இடத்தில் காற்றின் அழுத்தம் குறைந்து வெற்றிடம் உண்டாகும். அந்நிலையில் காற்றின் அழுத்தம் அதிகம் உள்ள பகுதியிலிருந்து வெற்றிடத்தை நோக்கி காற்று வீச ஆரம்பிக்கும். மேலே செல்லும் வெப்பக்காற்று குளிர்வடைந்து காற்றழுத்தத் தாழ்வு நிலை உண்டாகிறது. பூமியின் சுழற்சி காரணமாகக் காற்று அலைக்கழிக்கப்பட்டு அதன் வேகம் அதிகரித்து புயலாக உருமாறி பெரும் சேதாரங்களை உண்டுபண்ணும். இதேபோன்றே அரசியல் புயலும் சிறுகச் சிறுக மையங்கொண்டு, ஓங்கி அடிக்கும் போது பேரரசுகளே காணாமல் போய்விடுவதுண்டு. அரகலய புயலில் கோத்தாபய துண்டைக்காணோம், துணியைக் காணோம் என்று ஓடியதை இலங்கை மக்கள் எப்போதும் மறக்கமாட்டார்கள்.

கோத்தாபயவைச் சரித்து வீழ்த்திய அரசியல் சூறாவளி காலிமுகத்திடல் போராட்டத்தால் மட்டும் நிகழவில்லை. அந்தப் போராட்டத்தின் பொறிகள் முன்னரேயே தோன்றிவிட்டன. இரசாயன உரத்துக்கான தடை அதன் முதற்பொறி. அதன் பின்னர் எரிபொருள் , எரிவாயு என்பவற்றுக்கான தட்டுப்பாடு, எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறல், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், பால்மாவுக்குத் தட்டுப்பாடு என்று அவை ஒரு வரிசையுகத்துக்கு மக்களை இட்டுச் சென்றன. மக்கள் இனியும் இந்தநாட்டில் வாழமுடியாதளவுக்கு வாழ்க்கைச்சுமை அழுத்திய போது, அது 'அரகலய' போராட்டமாக வெடித்தது. இப்போது அநுர அலை இரு தேர்தல்களில் அடுத்தடுத்து அடித்து ஓய்ந்த நிலையில், கோத்தாபய காலத்தில் எழுந்ததைப் போல சிலபொறிகள் தோன்றத் தொடங்கியுள்ளன. தேங்காய், நாட்டரிசி என்பவற்றுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் அவற்றின் விலை சடுதியாக உயர்ந்துள்ளதோடு, அவற்றுக்கு வரிசைகளும் தோன்றத் தொடங்கியுள்ளன. இன்னொருபுறத்தில் பழையபடி எரிவாயுவும் கிடைத்தற்கரிய பொருளாக மாறத் தொடங்கியுள்ளது. கடந்தவாரம் கூட எரிவாயுவைப் பெறுவதற்காக மக்கள் முண்டியடித்ததால் பருத்தித்துறைப் பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது. இவை போதாதென்று மின்கட்டணத்தை ஆறுமாதங்களுக்கு இம்மியும் குறைக்கமாட்டோம் என அரசாங்கம் சண்டித்தனம் செய்யத் தொடங்கியுள்ளது.


இப்படி சிறுசிறு பொறிகளின் தோற்றம், இன்னொரு முறை கோத்தாபயவின் காலத்துக்கு இலங்கை சென்று கொண்டிருக்கிறதோ என்றே எ்ண்ணத் தோன்றுகின்றது. கோத்தாபய பதவிக்கு வந்தபோதும், இனி மேல் எவராலும் வீழ்த்தப்பட முடியாதவர்களாக ராஜபக்சக்கள் அதீதபலம் பெற்று விட்டார்கள் என்றுதான் எல்லோரும் நம்பினர். ஆனால் அவர் தன் ஆட்சியின் அரைவாசிக் காலத்தைக் கூட அனுபவிக்காமல் மக்களால் துரத்தப்பட்டார். இப்போது தேசியமக்கள் சக்தி அரசாங்கமும் மூன்றில் இரண்டுக்கும் மேலான பெரும்பான்மையைக் கொண்டு அசைக்கமுடியாத அதிகாரத்தோடு உள்ளது. அப்படி அதிகாரம் இருந்தும் மக்களின் வாழ்க்கைச்சுமை குறைந்தபாடில்லை. மாறாக புதிய சுமைகளும், புதிய நெருக்கடிகளும்தான் கூடிக்கொண்டே இருக்கின்றன. இந்த நெருக்கடிகள் மையங்கொண்டு, மக்கள் எழுச்சி என்ற காற்றழுத்த தாழ்வுநிலையாகி, போராட்டம் என்ற புயலானால் எந்த அரசாங்கத்தாலும் தாக்குப்பிடிக்கமுடியாது. எனவே பிரச்சினைகளின் முகிழ்நிலையிலேயே அவற்றை நிவர்த்திசெய்து, இன்னொரு 'அரகலய' தோன்றாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதே தேசிய மக்கள் சக்தி அரசின் முன்னுள்ள முழுமுதற்கடமை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது தடைகளற்ற வாழ்க்கை அல்ல, தடைகளை வெற்றி கொண்டு வாழும் வாழ்க்கை.

– ஹெலன் கெல்லர் –




### வடக்கு மாகாண
## பெண் முதலீட்டாளர்களை ஊக்குவிக்க செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

**வடக்கு மாகாண பெண் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் முகமாக 'பிரித்தானிய - இலங்கை வர்த்தக செயற்றிட்டம்' எனும் தொனிப் பொருளில் யாழ்.மாவட்டத்தில் விசேட செயலமர்வு கடந்த 4 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது .**

சர்வதேச வர்த்தக நிலையம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் ஏற்பாட்டில் பொதுநலவாயத்தின் விடயத்துக்குப் பொறுப்பான துறையின் நிதிப் பங்களிப்புடன் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. பிரித்தானியாவின் கொள்வனவாளர்கள், வர்த்தக ஊக்குவிப்பாளர்கள் மூலம் இலங்கையின் பெண் முயற்சியாளர்கள் மற்றும் அவர்களது நிறுவனம்சார் உற்பத்திகளை விருத்தி செய்வதோடு ஏற்றுமதியை அதிகரிப்பதும் சர்வதேச சந்தையில் பெண் முயற்சியாளர்களை உருவாக்குவதுமே இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும். நிகழ்வில் பொதுநலவாய அமைப்பின் குறித்த செயற்றிட்ட தலைவர் சைமன் கல்வட், ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர், பெண் முயற்சியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-125)

## இந்தியா நிவாரண உதவி

யாழ்ப்பாணம், டிசெ.9

யாழ். இந்தியத் துணைத் தூதரகத் தலைவர் சாய் முரளி மற்றும் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வட மாகாண மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கிவைத்தனர்.

நிகழ்வில் பெசலை, வெள்ளாங்குளம், துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சுமார் 2,100 குடும்பங்களுக்கு பாய் மற்றும் போர்வை என்பன வழங்கிவைக்கப்பட்டன. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 'நேபர் கூட் பெஸ்ட்' எனும் கொள்கையை பிரதிபலிக்கும் வகையில் இந்த உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-45-125)

## திறைசேரி உண்டியல்கள் ஏலம்

கொழும்பு,டிசெ. 9

திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது.

இந்த ஏல விற்பனை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச)

## டொலர் வருவாய் நவம்பரில் சரிவு

கொழும்பு,டிசெ. 9

வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்கள், நாட்டுக்கு அனுப்பும் தொகையில் சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்கள் நவம்பர் மாதம் 530.1 மில்லியன் அமெரிக்க டொலரை நாட்டுக்கு அனுப்பியுள்ளனர். இந்தத் தொகை கடந்த ஒக்ரோபர் மாதம் 587.7 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது என்றும் தரவுகள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## காலக்கெடுவின் பின் கணக்கறிக்கைகள்

கொழும்பு, டிசெ.9

2024 நவம்பர் 14ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பெரும்பாலான வேட்பாளர்கள் தற்போது தங்களது நிதிநிலை அறிக்கையை கையளித்துள்ளனர். வெள்ளிக்கிழமையுடன் காலக்கெடு முடிவடைந்த நிலையில், தமது நிதிநிலை அறிக்கையை பெரும்பாலானோர் கையளித்துள்ளனர்.

இதன்படி, தேர்தலில் போட்டியிட்ட 8,800 வேட்பாளர்களில், 7,846 பேர் தங்கள் நிதிநிலை அறிக்கையை ஒப்படைத்துள்ளனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - கார்த்திகை - 25
10.12.2024
சுபநேரம் : 10.49 - 12.49
ராகுகாலம் : 03.19 - 04.49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவி வழங்கல்

மன்னார், டிசெ.9
மன்னார் மாவட்டத்தில் இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'ஈழத்தமிழர் வர்த்தக சங்கம்' கடந்த வெள்ளிக்கிழமை அத்தியாவசியப் பொருள்களை வழங்கி வைத்தது. மன்னார் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய 200 நபர்களுக்கு நுளம்பு நெற், பாய், படுக்கைவிரிப்பு, துவாய் போன்ற பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-45-56)



# கலாசார அதிகாரசபை நிர்வாகசபைக் கூட்டம்

கிளிநொச்சி, டிசெ. 9
கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகாரசபையின் நிர்வாக சபைக்கூட்டம் மாவட்ட பதில் செயலர் எஸ். முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலகமாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், கலாசாரப் பிரிவின் உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25, 9)

# உலருணவு

யாழ்ப்பாணம், டிசெ.9
அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ச-33-17)



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.9
வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் இடம்பெறும் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் ஆன்மீக அருளுரையினை "குருவாய் வருவாய்" எனும் ஆன்மீகத் தலைப்பில் அதிபர் திருமதி கவிதா லலீசன் நிகழ்த்தினார். இதேவேளை செல்லர் வீதி, நல்லூரைச் சேர்ந்த ரீ யமுனாம்பிகா சமேத சிவசங்கரனார் திருக்கோவில் (பூதவராயர்) ஆலய கட்டிடப் பணிக்காக 200,000 ரூபா நிதியும், மல்லாகம் தெற்கு மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக கிணறுகள் தூய்மைப்படுத்துவதற்காக ஒரு பரல் குளோரினும் வழங்கிவைக்கப்பட்டது. (ச-45-27)



மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையமான கருவி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் விழா கருவி நிறுவனத் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (ச-45-66)







கோண்டாவில் மேற்கு நந்தாவில் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோண்டாவில் மாதர் சங்க முன்னாள் தலைவியும், விவாகப் பதிவாளருமான திருமதி வ.சோமசூரியசிங்கத்தினால் உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ரி-27)

# உலருணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.9
சுன்னாகத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 13 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஊடாக நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. கோண்டாவிலைச் சேர்ந்த தற்போது ஜேர்மன் நாட்டில் வசிக்கும் இராசரத்தினம் சந்திரனின் 60 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சுன்னாகம் ஜே/199 மற்றும் ஜே/198 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா நான்காயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-45-66)



பச்சிலைப்பள்ளி பிரதேச சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் [illegible] பான தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்ரீ சனாதன தர்மபீடத்தின் சார்பில் அளவெட்டி பெருமாக்கடவை ஈஸ்வரன் முன்பள்ளியில் கல்வி பயிலும் 45 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு புத்தகப்பை, கொப்பிகள், உபகரணங்கள் என்பன கடந்த வெள்ளிக்கிழமை அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ச-33 -63)

# கலாசார விழா

வடமராட்சி – தென்மேற்கு பிரதேச செயலகத்தின் கலாசார விழா, உதவிப் பிரதேச செயலர் சிவகாமி உமாகாந்தன் தலைமையில் மாலிசந்தி பிள்ளையார் ஆலயத்தின் பேராசிரியர் யோகராசா அரங்கில் அண்மையில் இடம் பெற்றது. இதன்போது ஆனந்தராணி நாகேந்திரன், ஆறுமுகம் சிவநாதன், கந்தப்பு ஜெயக்குமார், கதிரவேலு தனபாலசிங்கம், நாகரத்தினம் மகேந்திரன் ஆகியோருக்கு கலைஞான வாருதி விருதும், பாலச்சந்திரன் நாகேந்திரன், தங்கவேல் பார்த்தீபன், நற்குணம் ரகுநாதன், தர்மலிங்கம் சிறிதரன், ஆகியோருக்கு கலை வாருதி விருதும், ஜெயசீலன் சுகன்யா, ஜீவரட்ணம் கௌரிசங்கர் ஆகியோருக்கு இளங்கலைஞர் விருதும் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலர் ம. பிரதீபன், யாழ்மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணலினி விஜயரத்தினம், வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மேகவண்ணன், உதவிப் பிரதேச செயலர் சிவகாமி உமாகாந்தன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் தருமராசா அஜந்தகுமார், மூத்த கலைஞர்களான கிருஸ்ணபிள்ளை நடராசா, திருவாட்டி தம்பு சரோஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் வேல்நந்தன், பிரதேச கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச–25)



# சந்நிதி ஆச்சிரமத்தால் வெள்ள நிவாரணம்!

யாழ்ப்பாணம்.டிசெ.9

பெங்கால் புயல் மற்றும் வெள்ளப்பெருக்கால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் பழம்பாசி, கரடிப்பிலவு, 17ஆம் கட்டை, மாமடுச் சந்தி, பெரிய இத்திமடு, தட்டாமலை, தண்டுவான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 65 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த புதன்கிழமை 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் மாமடுச் சந்தி கற்பகா அறநெறிப் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டுள்ளன. (ச-33)


## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி - கட்டம் - V
## வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியின் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.12.09 – 2024.12.23 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.12.24 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)** எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்வி கள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக் கேள்விகள், அவை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.12.16 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரு.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/02/ 381/CF-45/2024 | வீதி புனரமைத்தல் வல்லை சங்கானை மூன்றாவது இடது பக்க வீதியும் கும்பளை குளம் வீதியின் முதலாவது வலது பக்க வீதியும் | 3.49 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 24.02.2025 | 35,000.00 | Till 24.03.2025 |
| 02 | NP/14/41(14)/05/02/ 382/CF-46/2024 | எல்லைச் சுவர் அமைத்தல் - கட்டுவன் விளையாட்டு மைதானம் | 1.85 | 60 நாட்கள் | C9 & C8 கட்டட நிர்மாணம் | 49 நாட்கள் | 10.02.2025 | 19,000.00 | Till 10.03.2025 |
| 03 | NP/14/41(14)/05/02/ 383/CF-47/2024 | இந்துமயானம் புனரமைத்தல் - சேந்தான்குளம் | 6.77 | 75 நாட்கள் | C7 & C6 கட்டட நிர்மாணம் | 77 நாட்கள் | 10.03.2025 | 68,000.00 | Till 07.04.2024 |
| 04 | NP/14/41(14)/05/02/ 384/CF-48/2024 | வாய்காலை மூடி மேடை அமைத்தல் - தெல்லிப்பளை சந்தி | 7.54 | 75 நாட்கள் | C7 & C6 கட்டட நிர்மாணம் | 77 நாட்கள் | 10.03.2025 | 76,000.00 | Till 07.04.2024 |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள் நீங்கலாக) 50மில்லியனினுள் இருப்பதால், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி).**
**09.12.2024.**

(cr.43843) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டச் செயலருடன் கட்டளைத் தளபதி சந்திப்பு



யாழ். மாவட்டத்தின் 51ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் நிஷாந்த முத்து மால யாழ். மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபனை மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை சந்தித்துக் கலந் துரையாடினார்.

(ரி-9-66)

# கணக்கெடுப்பினால் அச்சம் வேண்டாம்

கொழும்பு, டிசெ.9

மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளுக்காக வீடுகளுக்கு வரும் கணக்கெடுப்பாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங் குவதில் அச்சம் கொள்ளத் தேவை யில்லை என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவ ரத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

சனத்தொகைக் கணக்கெடுப்புக்கு வரும் அதிகாரிகளுக்கு சில வீடுக ளில் தகவல்கள் வழங்கப்படுவ தில்லை எனக் கூறப்படுகிறது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் டிசெம்பர் 23ஆம் திகதி நிறைவ டையும் என்று எதிர்பார்ப்பதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

(ச-இ)


## வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் கேள்வி அறிவித்தல் - 2025

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல. | கடை விபரம் | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக்கட்டணம் (ரூபா.) | மீளளிப்படும் கேள்வி வைப்பு (ரூபா.) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை, (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 01 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 02 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 02 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 03 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 03 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 04 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 04 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 05 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 05 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 06 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 06 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 07 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 07 | 6000.00 | 1000.00 | 8,000.00 | 1,440,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் - 09.12.2024 – 23.12.2024 ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 24.12.2024 ம் திகதி காலை 10.00 மணி வரை
3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 24.12.2024ந் திகதி காலை 10.00 மணிக்கு
4. 24.12.2024 திகதி காலை 10.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் இலங்கைப்பிரஜையாக இருப்பதுடன் கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.
6. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர், கடையின் பெயர் என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு **செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ உரிய நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
9. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாள ராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத் தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப் படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளர்க்கு பூரண அதிகர்ரம் உண்டு.
13. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு – கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.**

**செயலாளர்,**
**பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம்.**

(cr.43845) (N-1)



## மரண அறிவித்தல்



தோற்றம் 29 • 11 • 1935

மறைவு 07 • 12 • 2024

## கௌரிநாயகி நாகராசா

காளி அம்மன் கோவிலடி, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் இல.04, காரைக்காட்டு லேன், வண்ணார பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கௌரிநாயகி நாகராசா நேற்றுமுன்தினம் (07.12.2024) சனிக கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கரம்பொன் மா. சோமசுந்தரம் - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கரம்பொன் ஐ.கந்தையா - சுந்தரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற க.நாகராஜா அவர்களின் அன்பு மனைவியும், திலகவதி, மன்மதராசா, பழனிவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வீ.தர்மலிங்கம், பத்மாதேவி, காலஞ்சென்ற சுபோதினி ஆகியோரின் அன்பு மாமியும், சுலக்சன், கோபிகா, திவாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கெங்காதரன், மகாலிங்கம் மற்றும் கமலாம்பிகை (ராசாத்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, சந்திரசேகரம் மற்றும் விஜயலட்சுமி (சோதி) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2024) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.04, காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
வீ. தர்மலிங்கம் - மருமகன்
த.திலகவதி - மகள்
நா. மன்மதராசா- மகன்
நா. பழனிவேல் - மகன்
021 222 1401



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 • 07 • 1956

மறைவு 21 • 11 • 2023

## அப்புத்துரை ஜெயக்குமார்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(cs53141) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 மாதங்களில்

# ரூ. 1,559.7 பில்லியன் கடன் செலுத்தப்பட்டது!

வவுனியா,டிசெ.9
இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 1,559.7 பில்லியன் ரூபா வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்களுக்கான வட்டியை செலுத்துவதற்கு செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தலுக்கு முந்தைய வரவு - செலவுத் திட்டத் தின் நிலை குறித்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன்களுக்கான வட்டியைச் செலுத்த 1,525.7 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்களுக்கான வட்டிச் செலவு 34 பில்லியன் ஆக 2.2 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிச் செலவுகள் மாத்திரம் 100 பில்லியனாக 34.9 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 1,451.6 பில்லியன் ரூபாவாக இருந்த உள்நாட்டுக் கடனுக்கான வட்டிச் செலவு இவ்வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 1459.7 பில்லியன் ரூபாவாக 0.6 வீதத்தால் சிறிதளவு அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)


# சேவை நலன் பாராட்டு



Congratulations

Best Wishes

யாழ். போதனா வைத்தியசாலையில் 33 வருடங்களாகத் தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிப் பொறுப்புச் சகோதரியாகவும், சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் 7 வருடங்களாக விடுதிப் பொறுப்புச் சகோதரியாகவும், தாதிய பரிபாலகியாகவும் கடமையாற்றி (10.12.2024 தனது 60 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவதுடன்) இன்று(09.12.2024) திங்கட்கிழமை ஓய்வுபெற்றுச்செல்லும்

திருமதி பவானி குணராசசேகரம்

அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்


## கேள்வி அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி** அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2024/2025 ஆம் ஆண்டிற்கான வாகன சுத்திகரிப்பு சேவைக்கு இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

| விடயம் | குறியீட்டு இலக்கம் | வாகனங்களின் எண்ணிக்கை | சேவைக் காலம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | கேள்வி பிணைப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|---|
| வாகன சுத்திகரிப்பு சேவை | NP/KOC/RDHS/42/2/VS/2024/25 | 28 | ஒரு வருடம் | 2,500.00 | 55,000.00 | 20.03.2025 |

2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்விதாரர்கள் உரிய வகையிலான வியாபார பதிவுடையவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி,** (தொலைபேசி இல 0212285932/ 0212225719 ) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொணடுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 10.12.2024ம் திகதி முதல் 22.12.2024ம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மேலே அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 23.12.2024 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் நேரடியாக நிதிக்கிளையில் காணப்படும் பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகைக்கான குறியீட்டு இலக்கத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். 23.12.2024 ஆந் திகதி முற்பகல் 10:30 மணிக்கு நேரடியாக கழேயுள்ள முகவரியில் வருகை தரும் கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
8. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. பெறுகை முன்னறிவுப்பு முன்னரான கூட்டமொன்று (Pre Bid Meeting) கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 16.12.2024 ஆம் திகதி முற்பகல் 10:30 மணிக்கு நடைபெறும்.
10. 01/11/2024 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அத்துடன் வங்கி உத்தரவாதக்கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
12. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**

(cr.43850) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறியியலாளர்களால் உலருணவுப் பொதிகள்!

யாழ்ப்பாணம், டிசெ.9
வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்களுக்கு வடக்கு மாகாண பொறியியலாளர்கள்



தன்னார்வமாக ஒன்றிணைந்து அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 300 குடும்பங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் 250 குடும்பங்களுக்கும் முல்லைத்தீவில் 50 குடும்பங்களுக்குமாக சுமார் 600 குடும்பங்களுக்கான பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-45-27)




## பளைப் பொலிஸ் நிலையம் '5 எஸ்' திட்டத்தில் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9
பொதுமக்களுக்கு சிறந்த வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்குடன் பொலிஸ் நிலையங்களை 5 எஸ் திட்டத்துக்குள் கொண்டுவரும் ஓர் அங்கமாக வடமாகாணத்தில் முதலாவது பொலிஸ் நிலையமாக கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையம் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

5 எஸ் திட்டத்தின் கீழ் செயற்படும் முன்மாதிரி பொலிஸ் நிலையமாக கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி.ஏ.தனபால, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சமந்த டீ சில்வா, கிளிநொச்சி பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் உப்புல் செனவரத்ன, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25-113)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
16 . 08 . 1950

மறைவு
23 . 11 . 2023

## தம்பிப்பிள்ளை ஜெயகுமார்

(உரிமையாளர் ஜெயகுமார் ஸ்ரோர்ஸ் - புளியங்கூடல்)

**திதி: 11.12.2024 - பூர்வபக்க ஏகாதசி**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் வணக்க நிகழ்வும் நாளை மறுதினம் (11.12.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் புளியங்கூடல் லட்சுமி நாராயண மண்டபத்தில் மதியபோசன நிகழ்வு நடைபெறும். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பா!
உங்கள் பாசமான முகம் பார்த்து ஒரு வருடம் ஆனதே!
உங்கள் முகம் காண பரிதவித்து நிற்கின்றோம்.
உங்கள் புன்னகை பூத்தமுகம்
எங்கள் நினைவில் என்றுமே மறையாது.
நாம் வாழும் காலம்வரை எங்கள் இதயங்களில்
வாழ்ந்துகொண்டு தான் இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

(cs56848) (N.1)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
076 204 1516

## ஐ.நா. அமைதிப் பணியில் இலங்கை விமானப் படை

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கைவிமானப்படையின் ஹெலிகொப்டர் படையின் 108 பேர் கொண்ட குழு ஒன்று மத்திய ஆபிரிக்க குடியரசுக்குச் சென்றுள்ளது.

இந்தக் குழு ஹெலிகொப்டர் படைப்பிரிவின் போக்குவரத்து, வி.ஐ.பி. போக்குவரத்து, உணவு மற்றும் பானங்கள், உள்நாட்டு விமானங்கள், பரசூட் மூலம் பொருள்களை இறக்குதல், மருத்துவ குழு போக்குவரத்து உள்ளிட்ட பலவிதமான பணிகளுக்கு தீவிரமாக பங்களிப்பு வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## அந்தியேட்டி வீட்டுக்கிருந்திய ஆத்மாசாந்திப் பிரார்த்தனை அழைப்பிதழ்



அன்னை மடியில்
05 . 01 . 1940

ஆண்டவன் அடியில்
10 . 11 . 2024

அன்புடையீர்!

கடந்த 09.11.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் சின்னத்துரை பத்மாவதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 09.12.2024 (திங்கட்கிழமை) அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் 10.12.2024 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் "பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில்" நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்ன்புடன் அழைக்கின்றோம்.

கீரிமலை வீதி,
கொல்லங்கலட்டி.

நன்றி


(CS 2006) V-1

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அமரர் குட்டியன் இரத்தினமணி

### (ஓய்வுநிலை சாரதி-வடபிராந்திய போக்குவரத்துச்சபை)



தோற்றம் 04.02.1938 மறைவு 08.12.2024

அச்சுவேலி தெற்கு அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியன் இரத்தினமணி நேற்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டியன்-தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், இரவீந்திரன் (பிரான்ஸ்), இரஜீந்திரன் (லண்டன்), இரஜனி (பிரான்ஸ்), இராகவன் (வடபிராந்திய போக்குவரத்துச் சபை-கோண்டாவில் சாலை), இராகினி (ஆசிரியை அச்சுவேலி ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமா (பிரான்ஸ்), விஜிதா (லண்டன்), நேசலிங்கம் (பிரான்ஸ்), சுஜிதா (ஆசிரியை-வளலாய் அ.த.க பாடசாலை), பார்த்தீபன் (அதிபர்-தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷனா, செந்தூரன், பார்த்தீபன், ஆதித்தியன், அனிஷன், ஆதனாஸ், வினோஜ், டினோஜ், நிருஷா, துஷாந்தன், திருவரன், வேதரன், ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தங்கம், அரியகுட்டி, மாணிக்கம், அன்னம், பெரியராசா, சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பருத்தித்துறை வீதி அச்சுவேலி தெற்கில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை (10.12.2024) செவ்வாய்க்கிழமை நடைபெற்று காலை 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு
அச்சுவேலி.

(CR 43857) V-1

தகவல்:
குடும்பத்தினர்
077 238 0171

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண...

நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இளைஞர் வசிக்கும் வீட்டுக்கு முன்பாக நடந்துள்ளது. உயிரிழந்தவர் 29 வயதான இளைஞர் என்று தெரியவருகின்றது. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், அந்தநாட்டுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-66)

## உயிரைப்...

காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர்கள், நோய் திடீரெனத் தீவிரத்தன்மை அடைந்து உயிரிழந்துள்ளனர். இவர்களின் சுவாசத்தொகுதி கடும் பாதிப்படைந்துள்ளமை மருத்துவ அறிக்கைகளில் தெரியவந்துள்ள நிலையில் இவர்களின் உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சல் அல்லது உண்ணிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 40 வயது ஒருவர் சாதாரண காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதேபோன்று காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த 28 வயதுடைய ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். நாவற்குழியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவர் காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சாதாரண காய்ச்சல் நிலைமையில் இருந்த இவர்களுக்கு திடீரென நோய் தீவிரத்தன்மை அதிகரித்ததை அடுத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். மந்திகை மற்றும் கிளிநொச்சியில் சேர்க்கப்பட்டிருந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். அவர்களின் நோய்த்தன்மை சடுதியாகத் தீவிரமடைந்ததை அடுத்து அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்களின் உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சல் அல்லது உண்ணிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அல்லது ஏதேனும் வைரஸ் தொற்றுக் காய்ச்சலாக இருக்கலாம் என்றும் கருதப்படும்நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்கூற்று மாதிரிகள் சட்டமருத்துவ அதிகாரியால் மேலதிக சோதனைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளது.

இதுதொடர்பாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் கேட்டபோது, இரு நாள்களுக்குள் ஏற்பட்டுள்ள இந்த உயிரிழப்புகளை சாதாரண விடயமாகக் கடந்து விடமுடியாது என்று தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடுமையான சுவாசத் தொகுதி பாதிப்புக் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த சில நாள்களாக வடக்கில் கடும் மழை பெய்திருக்கும் நிலையில் எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. ஆனால் இந்த உயிரிழப்புகளுக்கு எலிக்காய்ச்சல் காரணம் என்று இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. உண்ணிக்காய்ச்சல் அல்லது ஏதேனும் வைரஸ் காய்ச்சல்கூடக் காரணமாக இருக்கலாம். கொழும்பில் இருந்து ஆய்வறிக்கை வந்தபின்னரே காரணத்தைச் சரியாகக் கூறமுடியும்.

ஆயினும், பொதுமக்கள் இதுதொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம். பொதுமக்கள் சுகாதாரத்தைச் சரியாகப் பேணிச் செயற்பட வேண்டியது அவசியம். ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் பாவனை அவசியமானது. அத்துடன் காய்ச்சல், இருமல் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாகத் தகுதிவாய்ந்த மருத்துவரை நாடி உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவேண்டும் - என்றார். (அ-எ-26)

## போராளிகளிடம்...

டமஸ்கஸையும் கைப்பற்றினார்கள். இதையடுத்தே, சிரியா தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக போராளிகள் அறிவித்துள்ளனர். சிரியத் தலைநகர் டமஸ்கஸ் போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது என்பதை சிரிய இராணுவமும் உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன், போராளிகளுடன் இணைந்து செயற்படத் தயார் என்றும் சிரிய இராணுவம் அறிவித்துள்ளது.

'அதிபர் அல் அசாத், டமஸ்கஸ் விமான நிலையத்தின்வழியாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். அவர் ரஷ்யாவுக்குச் சென்றாரா அல்லது ஈரானுக்குச் சென்றாரா என்பது தொடர்பான தகவல்கள் தெரியாது. நான் இந்த நாட்டைச் சேர்ந்தவன். ஆதலால், என்ன நடந்தாலும் நான் நாட்டைவிட்டு வெளியேறமாட்டேன்' என்று சிரியப் பிரதமர் அல் ஜலாலி தெரிவித்துள்ளார்.

போராளிகளிடம் ஆட்சியை ஒப்படைக்கவும், அவர்களுடன் இணைந்து செயற்படவும் நாம் தயார். அத்துடன், சிரிய இராணுவத்தினரை பழிவாங்கும் செயற்பாடுகளில் போராளிகள் ஈடுபடக்கூடாது என்றும் சிரியப் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

50 ஆண்டுகளுக்கும் மேலாக அல் அசாத் குடும்பத்தினர் சிரியாவின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர். 20 ஆண்டுகளுக்கும் மேலாக அல் அசாத் ஆட்சியில் இருந்தார். ஆதலால், தற்போது அங்கு ஏற்பட்டுள்ள இந்த ஆட்சிமாற்றம் சர்வதேச அரசியலில் முக்கியமான திருப்பமாகக் கருதப்படுகின்றது. அத்துடன், போராளிகளின் பின்னணியில் அமெரிக்காவும், அசாத்தின் பின்னணியில் ரஷ்யாவும் இருந்த நிலையில், இந்தப் போரை அமெரிக்காவின் வெற்றியாகவே சர்வதேச போரியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். (அ-ம)

## அல் அசாத்...

சிரிய அதிபர் அல் அசாத் பயணித்த விமானம், சிரிய எல்லையைக் கடப்பதற்கு முன்னர் காணாமற்போயுள்ளது. இதனால், அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சிரியத் தலைநகர் டமஸ்கஸ் நேற்றுமுன்தினம் பின்னிரவு போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. போராளிகளால் டமஸ்கஸ் கைப்பற்றப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர், அதிபர் அல் அசாத் உயரடுக்குப் பாதுகாப்புடன் நாட்டைவிட்டு வெளியேறினார் என்று சிரிய இராணுவமும் ரஷ்யாவும் உறுதிப்படுத்தியுள்ளன. எனினும், அவர் எங்கு சென்றார் என்ற தகவல்கள் இல்லை.

இதற்கிடையே, சிரிய எல்லையைக் கடப்பதற்கு முன்னர் அதிபர் அசாத் பயணித்த விமானம் தொடர்பாடல் அறையுடன் தகவலை இழந்தது என்றும், அந்த விமானத்துக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை எனவும் விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதனால், அதிபர் அசாத் பயணித்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கலாம் அல்லது அவர் எங்கு செல்கின்றார் என்ற விடயம் வெளி உலகத்துக்குத் தெரியக்கூடாது என்பதற்காக விமானத்துக்கும் தகவல் கட்டுப்பாட்டு அறைக்கும் இடையிலான தொடர்பை ரஷ்யா துண்டித்திருக்கலாம் என்றும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. அதிபர் அசாத்தின் மனைவியும், குழந்தைகளும் கடந்த வாரம் ரஷ்யாவுக்குச் சென்று அங்கு அரசியல் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தமிழக...

ஈடுபட்டிருந்த கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 8 பேரைக் கைது செய்தனர். அவர்களின் இரு படகுகளும் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல்வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டநிலையில், அவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். தமிழக மீனவர்கள் 8 பேரையும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-26-66-100)

## புலிகள்...

இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று கடந்த மார்ச் மாதம் (மக்களவைத் தேர்தல் காலத்தில்) இந்திய மத்திய அரசாங்கம் அறிவித்திருந்தது.

மத்திய அரசாங்கத்தில் இந்த முடிவுக்கு தமிழகத் தலைவர்களான வைகோ, சீமான் உள்ளிட்டவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து, முடிவை மறுபரிசீலனை செய்வதற்காக மத்திய அரசாங்கத்தால் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பாயமே தற்போது புலிகள் மீதான தடையை உறுதி செய்துள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பினர் தனி நாட்டுக் கோரிக்கையை இன்னும் கைவிடாமல், தலைமறைவாக செயற்பட்டு வருகின்றனர். நிதி திரட்டுதல் மற்றும் தனிநாடு குறித்த பரப்புரை நடவடிக்கைகளை அந்த அமைப்பு தீவிரப்படுத்தியுள்ளது. எனவே, புலிகள் மீதான தடை பொருத்தமானதே என்று தீர்ப்பாயம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் நோக்கம், இந்திய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை அச்சுறுத்துவதாக உள்ளது. எனவே, அந்த அமைப்பின் மீதான தடையை இரத்துச் செய்யமுடியாது என்றும் தீர்ப்பாயம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## புதிய...

அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிப்பது, கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இந்தப் பயணத்தின்போது அவதானம் செலுத்தப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

அதேநேரம், டில்லி மற்றும் கொழும்புக்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பில் இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். முக்கியமாக மின்சக்தி துறையில் இந்திய முதலீடுகள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ-எ-44)

## கிணற்றுக்குள்...

சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுப் பிற்பகலில் இருந்து பெண்ணைக் காணவில்லை என்று அவரது குடும்பத்தினர் தேடியபோது அந்தக் கிணற்றுக்கு அருகில் அவரது கைத்தொலைபேசிச் சத்தம் கேட்டதை அடுத்து, அவரது உடல் கிணற்றுக்குள் கண்டுபிடிக்கப்பட்டது. உயிரிழந்தவர் 42 வயதான குடும்பப் பெண் என்று தெரிவிக்கப்படும் நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பருத்தித்துறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## பிரான்ஸ்...

கும்பலின் தலைவராகச் செயற்பட்டவர் என்றும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பிரான்ஸ் மற்றும் கனடாவின் அறிவுறுத்தலுக்கு அமைய சந்தேகநபருக்கு எதிராகச் சர்வதேசப் பொலிஸார் பிடியாணை பிறப்பித்திருந்தனர். பிரான்ஸ் கொலைச் சம்பவத்தின் பின்னர் சட்டவிரோதமான முறையில் இவர் கனடாவுக்குள் நுழைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டு மே மாதம் வரையில் இந்த நபர் அகதிகள் அனுமதி விசாரணைக்கு முன்னிலையாகத்தவறியதால் ரொறன்ரோ பொலிஸ் சேவையின் உதவியுடன் கனடா எல்லைச் சேவை முகவரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிகாரிகள் சர்வதேசப் பொலிஸாரின் கோப்பில் வழங்கப்பட்ட கைரேகைகளைச் சோதனை செய்தபோது அது பொருந்தியதை அடுத்து கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்று சர்வதேச ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## விபத்தில்...

ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த தம்பையா சுப்பிரமணியம் (வயது-81) என்பவரே உயிரிழந்தவராவார்.

காங்கேசன்துறை வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் மோதி இவர் விபத்துக்குள்ளானார். படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தநிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்சன் தயான் அஞ்சலா நேற்று மேற்கொண்டார். (அ-எ-26)

## கடந்தகால...

தெரிவித்துள்ளது. மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான சரியான கொள்முதல் நடைமுறையைப் பின்பற்றாததன் காரணமாக இந்த நிலைமை தோன்றக்கூடும் என்று அந்தக் கூட்டமைப்பின் செயலாளர் மருத்துவர் நிபுணா சமல் சஞ்சீவ கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

புதிய வருடம் ஒன்று ஆரம்பமாகும்போது சுகாதார அமைச்சால் அந்த வருடத்துக்கான மருந்துகளுக்கான மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டு கொள்வனவுக்கான வேண்டுகோள் விடுக்கப்படவேண்டும்.

ஆனால், கடந்த அரசாங்கத்தின் பலவீனம் மற்றும் கடந்தகாலங்களில் சுகாதாரத்துறையின் அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டமையால் தற்போது மருந்து ஒழுங்குபடுத்தல், கொள்வனவு மற்றும் விநியோகம் ஆகிய செயற்பாடுகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மருத்துவ விநியோகப்பிரிவின் தரவுகளுக்கமைய அடுத்த ஆண்டு பெரியளவில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. இன்சுலின், புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் சில உயிர்காப்பு மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியர்களை பணிநீக்கும் திட்டமில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

**வவுனியா, டிசெ.9**

**அரச ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. மாறாக உற்பத்தியை மேம்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துள்ளது. பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரச வருமானத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக அரசசேவையைக் குறைக்கவேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்தும்கோரிக்கைகள்விடுக்கப்பட்டு வருகின்றன. பணி நீக்கம் என்பது வேலை வாய்ப்பில் இன்னொரு நெருக்கடியை ஏற்படுத்துமே தவிர அதனால் தீர்வு எதுவும் ஏற்படாது.
அதேநேரம் எதிர்காலத்தில் அரசசேவையில் ஆட்சேர்ப்புச் செய்யும் போது உற்பத்தித்திறன் கவனிக்கப்படும். கடந்த காலங்களில் வெவ்வேறு அரசாங்கங்களின் கீழ் உற்பத்தித்திறன் அம்சத்தில் கவனம் செலுத்தாமல் தற்காலிக முறையில் பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்பு செய்தது. அது எதிர்காலத்தில் சரி செய்யப்படும் - என்றார். (ச-இ)

## அரிசி விலையை கண்காணியுங்கள்

**கொழும்பு,டிசெ. 9**
ஜனவரி மாதம் முதல் 4 வகையான அரிசிகளுக்கான விலைக் கட்டுப்பாடுகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என தேசிய அரிசிக் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் அருணகாந்த பண்டார தெரிவித்துள்ளார். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, பிரதான அரிசி ஆலைகள் கீரிச் சம்பா விலையை உயர்த்துகின்றன.
கீரிச் சம்பாவின் விலை உயர்ந்தவுடன், அடுத்த பருவத்தில் கீரிச் சம்பாவை சாகுபடி செய்ய விவசாயிகள் முயற்சி செய்கின்றனர்.
விலை குறைவாக இருக்கும்போதே, ஆலை உரிமையாளர்கள் களஞ்சியசாலைகளை நிரப்பி வைத்துவிடுவர். அப்படி நிரப்பி அதிக விலைக்கு விற்பனை செய்வர். பிரதான ஆலை உரிமையாளர்கள் அதிகாரிகளின் உதவியுடன் நிலைமையின் சமநிலையை உடைக்கிறார்கள்.
எனவே இந்த நிலையிலேயே நாட்டரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே 4 வகை அரிசிகளுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கட்டுப்பாட்டு விலை கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## அடிலெய்டில்

# அடி வாங்கிய இந்தியா அவுஸ்திரேலியா அபாரம்

**அடிலெய்ட், டிசெ.9**
அடிலெய்டிலில் நடைபெற்ற இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.




கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான முதல் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறிய இந்திய அணி 180 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.
அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 337 ஓட்டங்கள் எடுத்து 157 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.
முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சை சமாளிக்கமுடியாமல் திணறியது போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் இந்தியப் பந்தடிப்பாளர்கள் தடுமாறினர். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரண்டாம் நாள் ஆட்டத்தின் முடிவில் இந்திய அணி 128 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தின் தொடக்கத்திலேயே அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் விக்கெட் வேட்டையைத் தொடங்க இறுதியில் இந்திய அணி 175 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆட்டமிழந்தது. இறுதியில் அவுஸ்திரேலியா அணிக்கு 19 ஓட்டங்களே இலக்காக இருந்த நிலையில் இலக்கை எளிதாக எட்டிய அவுஸ்திரேலியா நான்காவது ஓவரில் வெற்றிபெற்றது. இதேவேளை மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் டிசெம்பர் 14ஆம் திகதி பிரிஸ்பேனில் நடைபெறவுள்ளது. (ச-33)

# மரண அறிவித்தல்

## அமரர் இரத்தினேஸ்வரன் குணரட்ணம்



**தாயின் மடியில் 04.01.1951 இறைவன் அடியில் 05.12.2024**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, மற்றும் வவுனியா செக்கடிப்புலவில் வசித்தவருமாகிய இரத்தினேஸ்வரன் குணரட்ணம் (ஆசிரியர்) கடந்த (05.12.2024) வியாழக்கிழமை வவுனியவில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலம் சென்றவர்களான - குணரத்தினம்-புவனேஸ்வரி தம்பதியின் அன்பு மகனும் நல்லையா-காலஞ்சென்ற நவமணி தம்பதியின் மருமகனும் மோகனாம்பிகையின் (ஆசிரியை) அன்புக் கணவரும் வேணுஜனின் அன்புத் தந்தையும் இரத்தினேஸ்வரி (NZ) இராஜேஸ்வரி (CA), சௌந்தரேஸ்வரி (CA), நாகேஸ்வரி (UK), காலஞ்சென்ற சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மருதையினார், கிரிதரன், லோகேந்திரராஜா, நாகேந்திரன், மீனலோஜினி, நரேந்திரன், நந்தினி, திருக்கேதீஸ்வரன், சிவகாமி, சிவாஜினி, ராசன், சாந்தகுமாரி, புனிதராசா, இரத்தினதுரை, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கீதா, சோபனா, பிரசாந்தினி, பார்த்திபன், பைரவி, ரேநாத், கோபிநாத், கிருஷ்சான், அட்சயா, அட்சுயன், தனுஜன், தர்சிகன், கிருசாந், சஜிவன், பூமிகா ஆகியோரின் மாமனாரும், டசிகரன், கிசான், தனுகரன், பிரசாந்த், டிலக்ஷன், கனிசா, பவிசாலி, சயந்தினி, சுயந்தினி, சரண்யா, ஷாலினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.12.2024) செவ்வாய்க்கிழமை10.00 மணியிலிருந்து 12.00 மணி வரை நடைபெற்று, பின் தகனத்துக்காக செக்கடிப்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

| | |
|---|---|
| மகன் (வேணுஜன்) | 077-540-0246 |
| நரேந்திரன் (மைத்துனர்) | 077-807-0465 |
| இரத்தினேஸ்வரி (அக்கா) | +64-021-028-18334 |

(CR 9067) V-1

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 09 . 06 . 1950 **மறைவு** 06 . 12 . 2024

## பாலசுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மன்னார் சின்னக்கடை, அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன் கடந்த 06.12.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துக்குமார் - மற்றும் அன்னபூரணி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கௌரியம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜ், ஸ்ரீறங்கராஜ், செந்தில்ராஜ், வினோராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாஷினி, லினோகிறிஸ்ரீன், தருணிகா, சகானா ஆகியோரின் அன்பு மாமானாரும், ஜஷ்சானி, றஜீஷன், அவனியா, கிரித்தீஸ், அர்ச்சுனா, வேணுஷிகா, ஆதிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.12.2024) புதன் கிழமை காலை 9.30 மணியளவில் Honoululu Havall - அமெரிக்காவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

| | |
|---|---|
| செந்தில்ராஜ் | - + 180 886 19171 |
| ஸ்ரீறங்கராஜ் | - + 94 7735 43579 |

(CS/56867) N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org